தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
&
இந்தியவானிலைத் துறை
தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை
திருவாரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
(22.01.2024 முதல் 26.01.2025)

அறிக்கை எண் 86/2024 தேதி. 21.01.2025

**திருவாரூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை**

திருவாரூர் மாவட்டத்தின் 17.01.2025 முதல் 20.01.2025 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 30 - 32 °செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை 22 - 24 °செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 93 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 92 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் வட கிழக்கு திசை வரை பதிவானது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருவாரூர் (22.01.2025 முதல் 26.01.2025)**

| கடந்த வார வானிலை (17.01.2025 முதல் 20.01.2025) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 26.01.2025- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 17/01 | நாள்-2 18/01 | நாள்-3 19/01 | நாள்-4 20/01 | தேதி | நாள்-1 22/01 | நாள்-2 23/01 | நாள்-3 24/01 | நாள்-4 25/01 | நாள்-5 26/01 |
| 0.0 | 0.0 | 22.5 | 4.1 | மழை (மி.மீ) | 14 | 24 | 0 | 0 | 0 |
| 32 | 30 | 30 | 30 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 29 | 29 | 29 | 30 | 30 |
| 24 | 23 | 22 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 23 | 23 | 23 | 24 | 24 |
| 6 | 6 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 5 | 6 | 6 |
| 79 | 85 | 93 | 93 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 93 | 93 | 93 | 90 | 90 |
| 78 | 90 | 92 | 86 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 86 | 86 |
| 4 | 4 | 4 | 4 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 10 | 10 | 12 | 14 | 12 |
| வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | காற்றுவீசும் திசை | கிழக்கு | கிழக்கு தென் கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு |

**திருவாரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 22.01.2025 மற்றும் 23.01.2025 அன்று மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 29 - 30 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 23 - 24 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 93 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 10 - 14 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் கிழக்கு வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| **பொது** | | மழையை கருத்தில் கொண்டு நீர் பாசனம், உரமிடுதல் மற்றும் மருந்து தெளிப்பதை தள்ளிபோடவும். தண்ணீர் தேங்கும் வயல்களுக்கு தகுந்த வடிகால் செய்யவும். |
| **நெல்** | **விதைப்பு மற்றும் அறுவடை** | அறுவடை செய்த நெல் வயல்களில், நெல் தரிசு பயிர்களை (உளுந்து, பச்சைப் பயறு) விதைக்கவும். |
| | | மழையை பொறுத்து அறுவடை நிலையில் இருக்கும் முதிர்ந்த நெல் வயல்களில் நெல் தரிசு உளுந்து, பயறு விதைக்கலாம். உளுந்துக்கு ஆடுதுறை 3. ஆடுதுறை 6 மற்றும் பச்சைப் பயறுக்கு ஆடுதுறை 3 ஆகிய இரகங்கள் நெல் தரிசுக்கு ஏற்ற இரகங்கள் ஆகும். |
| | | அறுவடை செய்த நெல் விதைகளை மழைக்கு முன் நன்கு காய வைத்து ஈரத்தன்மை 13 சதவீதத்திற்கு கீழ் இருக்குமாறு சேமித்து வைத்து பூச்சிகள் இல்லாமல் பாதுகாக்கவும். |
| **வாழை** | | வாழை மரங்கள் காற்று மற்றும் மழையால் சாயாமல் இருக்க வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| **கால்நடைகள்** | **மாடு மற்றும் ஆடு** | வைக்கோல் மற்றும் மக்காச்சோளம் போன்ற தீவன பொருட்களை வெயில் உலர்த்தி கால்நடைகளுக்கு கொடுப்பதன் மூலம் அப்ளாடாக்ஸின் என்ற நச்சின் தாக்கத்தில் இருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம். |

## குறுஞ்செய்தி

அறுவடை செய்த நெல் வயல்களில், நெல் தரிசு பயிர்களை (உளுந்து, பச்சைப் பயறு) விதைக்கவும்.

**இயக்குநர்**